**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**

**மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு**

**தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல் &**

**விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்தல்**

**செய்திக்குறிப்பு**

**I. தற்காலிக மதிப்பெண் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல்:**

மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளி தலைமையாசிரியர்கள் வழியாக தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை 22.05.2026 **அன்று பிற்பகல் முதல்** பெற்றுக் கொள்ளலாம்.

தனித்தேர்வர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Notification என்ற பகுதியில் சென்று **SSLC Provisional Mark Certificate** என்பதை Click செய்து தங்களது பதிவெண், பிறந்த தேதி ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து தாங்களே தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**II. விடைத்தாள் ஒளிநகலுக்கு விண்ணப்பம் செய்தல்:**

விடைத்தாள் ஒளிநகல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகள் வழியாகவும், தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வழியாகவும் 22.05.2026 (**வெள்ளிக்கிழமை) காலை** 11.00 **மணி முதல்** 27.05.2026 (**புதன்கிழமை**) **மாலை** 5.00 **மணி (24.05.2026 ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக) வரை** விண்ணப்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடத்திற்கும் விடைத்தாளின் ஒளிநகல் (Scan Copy of the answer script) **பெறுவதற்கான கட்டணம் ரூ.275/–** தேர்வர்கள் விடைத்தாட்களின் நகலிற்கான கட்டணத்தை விண்ணப்பிக்கவுள்ள பள்ளியிலேயே பணமாக செலுத்த வேண்டும்.

**விடைத்தாள் ஒளிநகல் பெற்ற தேர்வர்களுக்கு மட்டுமே பின்னர் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்.**

விடைத்தாளின் ஒளிநகலினை (Scan Copy) இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டிய நாள் மற்றும் விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்களுக்கு மறுகூட்டல் / மறுமதிப்பீடு செய்திட விண்ணப்பிப்பதற்கான தேதி பின்னர் ஊடகங்கள் வாயிலாகவும் மற்றும் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்படும்.

**இடம்:** சென்னை–6. **ஒம்/–**

**நாள்:** 21.05.2026 **இயக்குநர்**